

# எரிசக்தித் துறை

## மானியக் கோரிக்கை எண் : 14



# அறிவிப்புகள் 2021 - 2022

**V செந்தில்பாலாஜி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

# எரிசக்தித் துறை

## மானியக் கோரிக்கை எண். 14

## அறிவிப்புகள் 2021 - 2022

**V செந்தில்பாலாஜி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்

ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

# எரிசக்தித் துறை

## அறிவிப்புகள் 2021- 2022

1. **துரித நடவடிக்கை மூலம் விவசாயிகளுக்கு 1,00,000 புதிய மின் இணைப்புகள் (Agriculture Service Connections) வழங்குதல்.**

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினை பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் **1,00,000** புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2. தமிழகம் முழுவதும் 4,000 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் மற்றும் 2,000 மெகாவாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டத்துடன் கூடிய "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) தொழில் நுட்ப மற்றும் வர்த்தகரீதியான சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவப்படும்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் மின் தேவையினைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமானது தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் அபரிமிதமான சூரிய சக்தியினைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) மாவட்டம் தோறும், (மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகள் நீங்கலாக) நிறுவ உள்ளது.



தனியார் நிறுவனங்களிடம் இருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக் குறைத்து சூரியஒளி மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து, அவற்றின் மூலம் 10 ஆண்டுகளில் 20,000 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி மற்றும் 10,000 மெகாவாட் மின்கலன் சேமிப்பு செய்து மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதன் முதற்கட்டமாக தமிழகத்தில் சுமார் 4,000 மெகாவாட் திறனுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் 2,000 மெகாவாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. எண்ணூரில் 2000 மெகாவாட் அளவிற்கு சிறிய அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட்) அதிக எண்ணிக்கையிலான எரிவாயு இயந்திர மின் திட்டங்கள் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைத்தல்

சென்னையில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மரபுசாரா எரிசக்தி நிர்வாகத்திற்கும் சிறு அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட்) அதிக எண்ணிக்கையிலான இயந்திரங்களைக் கொண்டு 2,000 மெகாவாட் அளவிற்கு எரிவாயு இயந்திர மின் திட்டத்தினை சாத்தியக் கூறின் அடிப்படையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த எரிவாயு திட்டத்திற்கு எண்ணூரில் அமைந்துள்ள இந்திய எண்ணெய்க் கழகத்தின் (M/s. IOCL) சேமிப்பு கிடங்கிலிருந்து மறுவாயுவாக்கும் திரவ நிலை எரிவாயு (R-LNG) உபயோகப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.



எண்ணூர் மாற்று அனல் மின் நிலையம் நிறுத்தி வைக்கப்பட்டதால் தேவையான நிலம் எண்ணூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. புதிய எரிவாயு இயந்திர நிலையத்தின் மின் உற்பத்தியானது மின் நுகர்வு தேவைக்கும், மரபு சாரா எரிசக்தி மின்சார நிர்வாகத்திற்கும் பயன்படும். காற்றாலை மின்சாரமும் சூரிய சக்தி மின்சாரமும் கிடைக்கப்பெறாத தருணங்களில் மின் தேவையை சமநிலைப்படுத்த இந்த எரிவாயு இயந்திர மின் நிலையங்கள் மூலம் மின்சாரம் பெறப்படும்.

4. **கன்னியாகுமரி மாவட்டம், கோதையாரில் 500 மெகாவாட் நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் அமைத்தல்.**

தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை தேவைப்படும் கால நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 Hz முதல் 50.5 Hz வரை) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோதையாரில் 500 மெகாவாட் நீரேற்று புனல் மின் திட்டம் அமைக்கப்படும்.



5. **தேனி மாவட்டம், மணலாற்றில் 500 மெகாவாட் நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் அமைத்தல்**

தமிழ்நாட்டின் உச்ச மின் தேவை தேவைப்படும் கால நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 Hz முதல் 50.5Hz வரை) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், தேனி மாவட்டத்தில் உள்ள மணலாற்றில் 500 மெகாவாட் நீரேற்று புனல்மின் திட்டம் அமைக்கப்படும்.

6. பல்வேறு மாவட்டங்களில் 7500 மெகாவாட் மொத்த நிறுவு திறன் கொண்ட 11 புதிய நீரேற்று திட்டங்கள் சாத்தியக் கூறின் அடிப்படையில் அமைத்தல்.

7,500 மெகாவாட் மொத்த நிறுவு திறன் கொண்ட புதிய நீரேற்று புனல் மின் திட்டங்களை சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவுவதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 11 இடங்கள் அடையாளம் காணப்பட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. ஆய்வின் அடிப்படையில் திட்டம், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட செயலாக்கத்திற்கு தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறுவதற்காக ஆலோசகரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அடையாளங் காணப்பட்டுள்ள இடங்கள் :

- மேல் பவானி நீரேற்று புனல் மின் திட்டம் (1000 மெகாவாட்)/நீலகிரி மாவட்டம்.



- வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/கன்னியாகுமரி மாவட்டம்.
- ஆழியாறு நீரேற்று புனல் மின் திட்டம் (1000 மெகாவாட்)/கோயம்புத்தூர் மாவட்டம்.
- சாண்டிநல்லா நீரேற்று புனல் மின் திட்டம் (1000 மெகாவாட்)/நீலகிரி மாவட்டம்.
- மேட்டூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/சேலம் மாவட்டம்.
- பாலார்- பொரந்தலார் நீரேற்று புனல் மின் திட்டம் (1000 மெகாவாட்)/திண்டுக்கல் மாவட்டம்.
- காரையார் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/திருநெல்வேலி மாவட்டம்.
- மஞ்சளார் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/தேனி மாவட்டம்.
- சாத்தார் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்)/கன்னியாகுமரி மாவட்டம்.

- சிகூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்) / நீலகிரி மாவட்டம்.
- ஆத்தூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகாவாட்) / திண்டுக்கல் மாவட்டம்.



7. உடன்குடி விரிவாக்க திட்டம் நிலை - II (2x660 மெகாவாட்), உடன்குடி விரிவாக்க திட்டம் நிலை - III (2x660 மெகாவாட்) ஆகிய அனல் மின் உற்பத்தி திட்டங்களை செயலாக்கத்திற்கு கொண்டுவர மறு ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2007-08 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு வராத.

I. உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை-II (2x660 மெகாவாட்)

II. உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை III (2x660 மெகாவாட்) ஆகியவற்றை செயலாக்கத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் உப்பூர் அனல் மின்திட்டத்தை உடன்குடிக்கு மாற்றவும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தமிழக அரசிடம் விண்ணப்பித்துள்ளது. உப்பூர் அனல் மின்திட்டத்தை உடன்குடிக்கு பதிலாக உப்பூரிலேயே மீண்டும் நிறுவ மறு ஆய்வு செய்யப்படும். மேற்சொன்ன மறு ஆய்வு முடிவின் அடிப்படையில், முடிவு எடுக்கப்படும்.

8. நீலகிரி மாவட்டம் சில்லஹல்லா புனல் மின் நீரேற்று உற்பத்தி திட்டத்தை நிலை -I & II (2000 மெகாவாட்) செயலாக்கத்திற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

தமிழகத்தின் உச்ச மின் தேவையை நிறைவு செய்வதற்காக, தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெகாவாட் சில்லஹல்லா நீரேற்று புனல் மின்திட்டம் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தை இரண்டு பகுதிகளாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், முதற்படியாக சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே அமைக்கப்படவுள்ள சில்லஹல்லா நீர்த்தேக்கத்தை மேல் நீர்த்தேக்கமாகவும், குந்தாபாலம் நீர்த்தேக்கத்திற்கு கீழே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத்தை கீழ் நீர்த்தேக்கமாகவும் உபயோகப்படுத்தி சில்லஹல்லா நீரேற்று புனல் மின்திட்டம் நிலை-I & II ( 2000 மெகாவாட்) செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்பட்டு இத்திட்டத்தை விரைவாக முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.



9. மகாநதி நிலக்கரி நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படாத நிலக்கரிக்கு ஈடாக,பரிமாற்று முறையில் (Tolling of Coal) 1000 மெகாவாட் வரை மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய மொத்த உள்நாட்டு நிலக்கரி ஆண்டுக்கு 237.63 இலட்சம் டன்கள் ஆகும். அதாவது நாளொன்றுக்கு 17 ரேக்குகள். இது மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து (MCL) நிலக்கரி எரிபொருள் வழங்கும் ஒப்பந்தம் மூலமாக 195.63 இலட்சம் டன்கள் மற்றும் சிங்கரேணி நிறுவனத்திடமிருந்து (SCCL) புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக 42 இலட்சம் டன்கள் ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் (2016-2021) மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து நிலக்கரி 71 சதவிகிதம் மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது. 29 சதவிகிதம் வழங்கப்படவில்லை.

எரிபொருள் விநியோக ஒப்பந்தம் மூலம் வழங்கப்படாத நிலக்கரியின் ஒரு பகுதியை, நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகில் உள்ள தற்சார்பு மின் உற்பத்தி நிலையங்களுக்கு (IPP) வழங்கி அதற்கு ஈடாக மின் கொள்முதல் செய்து கொள்ளும் திட்டத்தின்படி, மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து வழங்கப்படாத நிலக்கரியை அருகில் உள்ள தற்சார்பு மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி அதற்கு ஈடாக 1000 மெகாவாட் வரை நிலக்கரி பரிமாற்ற முறையில் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. மின் ஏல முறையில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடமிருந்து எரிவாயுவை கொள்முதல் செய்து, தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி, அதற்கு ஈடாக மின்சாரம் பெறும் திட்டம் (Tolling of Gas) செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

எரிவாயு பரிமாற்ற முறை என்பது, மின்சாரத்தை வாங்குபவர் மின் உற்பத்தியாளருக்கு எரிவாயுவினை பரிமாற்றி அதற்கு நிகரான மின்சாரத்தை மின் உற்பத்தியாளரிடமிருந்து பெறும் செயல் முறையாகும். உள்நாட்டில் கிடைக்கப் பெறும் எரிவாயுவின் அளவு குறையும் நிலையிலுள்ளது. ஆந்திர மாநிலம் காக்கி நாடாவிலுள்ள இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம், கிருஷ்ணா - கோதாவரி படுகைகளில் கிடைக்கும் 2,00,000 கனமீட்டர் இயற்கை எரிவாயுவை 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்ய, ஒப்பந்த புள்ளிகளை மின் ஏல முறையில் கோரியுள்ளது.



இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் 2024 - ஆம் நிதி ஆண்டில் கிருஷ்ணா - கோதாவரி படுகையில் எரிவாயு உற்பத்தி உச்சநிலையை அடையும் என்று மதிப்பிட்டுள்ளது. கிருஷ்ணா - கோதாவரி படுகையில் கிடைக்கும் எரிவாயுவை இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடமிருந்து மின் ஏல முறையில் கொள்முதல் செய்து தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி இதற்கு பதிலாக 2,500 மெகாவாட் மின்சாரம் பெறும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

11. மூன்று வருட காலத்திற்கு குறைந்த விலையில் நடுத்தரகால ஒப்பந்தம் (Medium Term) மூலம் யூனிட் ஒன்று, ரூபாய் 3.26/- க்கு 1500 மெகாவாட் மின் கொள்முதல் செய்தல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சேமிப்பை ஏற்படுத்தும் வகையில் குறைந்த விலையில் நடுத்தரகால ஒப்பந்தம் மூலம் யூனிட் ஒன்று, ரூபாய். 3.26/- க்கு 1500 மெகாவாட் மின்சார கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



12. தடையில்லா மின்சாரம் வழங்க, மாலை நேர உச்சமின் தேவைக்காகவும் மற்றும் கோடை கால முழுநேர மின் தேவையை பூர்த்தி செய்யவும் குறுகிய கால (Short Term) ஒப்பந்தம் மூலம் மின் கொள்முதல் செய்தல்

மின் பற்றாக்குறையை சமாளித்து தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு 2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2022-ஆம் ஆண்டு மே மாதம் வரை குறுகிய கால ஒப்பந்தம் மூலம் மின்சாரம் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

குறுகிய கால மின் கொள்முதலுக்கு குறைந்தது 85% நிலைய மின் சுமை காரணி (PLF) அளவிற்கு கொள்முதல் செய்ய வேண்டிய நிர்பந்தம் உள்ளதால், நிதி இழப்பு ஏற்படாத வண்ணம் கீழ்கண்டவாறு குறுகிய கால மின் கொள்முதல் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | மாதம் | நேரம் | மெகாவாட் |
|---|---|---|---|
| 1 | அக்டோபர் 2021 | மாலை நேரம் மட்டும் | 1200 |
| | | நாள் முழுவதும் | 500 |
| 2 | நவம்பர் 2021 | மாலை நேரம் மட்டும் | 600 |
| 3 | டிசம்பர் 2021 | மாலை நேரம் மட்டும் | 900 |
| 4 | ஜனவரி 2022 | மாலை நேரம் மட்டும் | 1100 |
| 5 | பிப்ரவரி 2022 | மாலை நேரம் மட்டும் | 2400 |
| 6 | மார்ச் 2022 | மாலை நேரம் மட்டும் | 2400 |
| | | நாள் முழுவதும் | 1200 |
| 7 | ஏப்ரல் 2022 | மாலை நேரம் மட்டும் | 2200 |
| | | நாள் முழுவதும் | 1500 |
| 8 | மே 2022 | மாலை நேரம் மட்டும் | 2200 |
| | | நாள் முழுவதும் | 900 |

மேற்கண்ட கொள்முதல் மின்சாரம் போக பற்றாக்குறை வரும் பட்சத்தில், நடைமுறை சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் வெளிச்சந்தையில் தேவைக்கு கொள்முதல் செய்யும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது.



**13. காற்றாலை மின் உற்பத்தி காலங்களில் உபரியாக உள்ள மின்சாரத்தை தேவைப்படும் மாநிலங்களுக்கு வழங்கி கோடைக் காலங்களில் திரும்ப பெறும் மின் பரிமாற்ற முறையை (Swapping of Power) சீரியமுறையில் செயல்படுத்துதல்**

மின் பரிமாற்ற ஏற்பாடு என்பது இரு மாநில அரசு மின் நிறுவனங்களுக்கிடையில் பணப் பரிவர்த்தனைகள் இல்லாமல் மின்சாரப் பரிமாற்றம் மட்டுமே நடைபெறுவதாகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின் மூலம் பருவக்காற்று காலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) காற்றாலை மூலம் பெறப்படும் உபரி மின்சாரத்தைப் பிற மாநில அரசு மின் நிறுவனங்களுக்கு வழங்கி அதனை அடுத்த கோடை காலத்தில் (பிப்ரவரி முதல் மே வரை) திரும்பப் பெறும். கூடுதலாக கோடை மாதங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின் மூலம் பிற மாநில அரசு மின் நிறுவனங்களிடமிருந்து மின்சாரம் பெற்று அதனை வரும் பருவக்காற்றின் காலத்தில் திரும்பவழங்கும்.

தற்சமயம், பருவக்காற்றின் காலத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பரிமாற்ற மின் ஏற்பாடு வாயிலாக உபரி மின்சாரத்தை வழங்குகிறது. தற்போது இந்த பரிமாற்ற முறையில் 100 சதவீதம் பெறப்படும் மின்சாரத்திற்கு 105 சதவீதம் வரை மின்சாரம் திரும்ப அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் சேமிப்பு ஏற்படுத்தும் விதத்திலும், வலுப்படுத்தும் விதத்திலும் 2021-ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு காலத்திற்கு 1,000 மெகாவாட் அளவிற்கு இதர மாநில அரசு மின் நிறுவனங்களுடன் கலந்து பேசி திரும்ப அளிக்கும் மின்சாரத்தை 100 சதவீதத்திற்கும் குறைவாக திருப்பி செலுத்தும் வகையில் சேமிப்பு தொகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பற்றாக்குறை காலங்களில் குறுகியகால கொள்முதலை குறைக்க முடியும்.



**14. மின் தடை மற்றும் மின் வழித்தடங்களில் ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை கண்டறியும் நோக்குடன் ரூபாய் 1,270 கோடி மதிப்பீட்டில் மின்மாற்றிகளில் (Transformers) சிறப்பு மின் அளவி (Smart Meter) பொருத்துதல்**

தமிழ்நாட்டில் தற்சமயம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினரால் 3,63,200 மின்மாற்றிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதன் திறன் 16 KVA முதல் 500 KVA உள்ளது. இந்த மின்மாற்றிகள் நகரங்களின் நெருக்கடியான தெருக்களில் இருந்து மலைப்பிரதேசம் வரை அனைத்து இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய மின் மாற்றிகள் பழுதாகும் சமயங்களில் மின்தடை ஏற்படுகிறது.

இதனை தவிர்க்கும் பொருட்டு, அனைத்து மின்மாற்றிகளிலும் அதி நவீன வசதிகளுடன் கூடிய மின்மாற்றி கண்காணிப்பு அமைப்புடன் (Transformer monitoring system) கூடிய மின் அளவி பொருத்தப்பட உள்ளது. இந்த மின் அளவி மூலம், அந்தந்த மின்மாற்றியில் ஏற்படும் மின்னழுத்த ஏற்றத் தாழ்வுகள், வெப்பம், எண்ணெய் அளவு, செல்லும் மின்சாரத்தின் அளவு, அதிர்வெண் மற்றும் மொத்த மின் தடை ஆகியன பதிவு செய்யப்பட்டு ஸ்கேடா (SCADA)

மூலம் அந்தந்த பிரிவு அலுவலக கணினியுடன் இணைக்கப்படும். இதனால் அந்த மின்மாற்றியின் நிலையினை எந்த நொடியிலும் துறை சார்ந்த அலுவலரால் கண்காணிக்க முடியும். இவ்வாறு ஒவ்வொரு மின் மாற்றியின் சிறப்பு மீட்டரும் ஸ்கேடா (SCADA) மூலம் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைக்கப்பட்டு அனைத்து மின்மாற்றிகளையும் கணினி திரையில் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படும்.

இந்த அமைப்பானது மின் வழித்தடங்களில் ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை துல்லியமாக கணக்கிடவும், மின் திருட்டு பகுதிகளை கண்டறியவும் ஏதுவாக இருக்கும், மேலும், மின்மாற்றியில் ஏற்படும் பழுதுகள் வெகுவாக குறைக்கப்படும். இவ்வாறு பழுது குறைவதால், தங்கு தடையில்லா மின்சாரம் பொது மக்களுக்கு கிடைக்க ஏதுவாகும். இதன் மூலம் வருவாய் கூடுவதுடன், மின் ஊழியர் சந்திக்கும் மின் விபத்துகளையும் தவிர்க்க இயலும். மின் நுகர்வோருக்கு நாளின் 24 மணிநேரமும் எவ்வித தங்கு தடையின்றி தடையில்லா மின்சாரம் வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டே இத்திட்டத்தினை அமல்படுத்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 1,270 கோடியாகும்.



**15. மின் நுகர்வோர்களுக்கு மின் பயன்பாட்டினை கண்காணிக்கவும், கணக்கீட்டாளர் இன்றி இணைய வசதி மூலமே மின் நுகர்வை கணக்கிடவும் மின் இணைப்புகளில் வினைத்திறன் மிகு மின் அளவி (Smart Meter) பொருத்துதல்**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உள்ள அனைத்து தாழ்வழுத்த மின் இணைப்புகளிலும் தற்சமயம் சாதாரண மின் அளவிகளே பொருத்தப்பட்டுள்ளன. மின் நுகர்வோர் நலத்தினைக் கருத்திற் கொண்டும், அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினால் அனைத்து மின் இணைப்புகளிலும் தற்போது உள்ள மின் அளவிகளை வினைத்திறன் மிகு மின் அளவிகளாக மாற்றம் செய்யப்படும்.

இந்த வினைத்திறன் மிகு மின் அளவி பொருத்துவதினால் மின் நுகர்வோர் அனைவரும் தமது மின் பயன்பாட்டினை எந்நேரமும் கண்காணிக்க முடியும். இதனால் மின் நுகர்வோர் (Postpaid & Prepaid) முன் கூட்டியே தமக்கான மின் கட்டணத்தினை செலுத்த இயலும். உபயோகித்த மின்சாரம் முழுவதுமே

கணக்கிடப்படுவதால், ஆட்களின் தலையீட்டால் ஏற்படும் வருவாய் இழப்பு இந்த வினைத்திறன் மிகு மின் அளவி அமைப்பின் மூலம் தவிர்க்கப்படுவதுடன் கணக்கீடு குறித்த புகார்களும் மின் நுகர்வோரிடம் இருந்து வருவது தவிர்க்கப்படும்.

மின் நுகர்வோர்கள் தாங்கள் உபயோகித்த மின்சாரத்தின் அளவினைத் தங்களது அலைபேசியின் மூலமே எந்நேரமும் பார்க்க இயலும். மேலும், மின் பயனீட்டாளர்கள் தமது மின் கட்டணத்தினை மின் இணைப்பு துண்டிப்பு தேதிக்கு முன்பே மீள்நிரப்பு (Recharge) முறை மூலம் செலுத்திவிட்டால், மின் இணைப்பு துண்டிப்பினை முற்றிலுமாக தவிர்க்கலாம்.



**16. ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம் - I ல் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.**

வடசென்னை அனல் மின் நிலையம் - I அலகு- 2 மற்றும் அலகு-3 ஆகியவற்றில் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுபாட்டு அமைப்பை (Distributed Control System), ஒவ்வொரு அலகிற்கும் சுமார் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

17. ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம்-II ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல்.

வடசென்னை அனல் மின் நிலையம்-II ல் அலகு-1 மற்றும் 2ல் உலர்ந்த சாம்பல் வெளியேற்றத்தை மேம்படுத்த உலர் சாம்பலை அழுத்தி எடுத்து செல்லும் அமைப்பை (Pressurized Dense Fly Ash Conveying system), சுமார் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



18. ரூபாய் 1, 979 கோடி மதிப்பீட்டில் 159 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவுதல்.

தடையற்ற மின்சாரம் வழங்கும் நோக்குடன் நான்கு 230 கி.வோ துணை மின் நிலையங்கள், ஐம்பத்து மூன்று 110 கி.வோ துணை மின் நிலையங்கள் மற்றும் நூற்றி இரண்டு 33 கி.வோ துணை மின் நிலையங்கள் என மொத்தம் 159 புதிய துணை மின் நிலையங்கள் ரூபாய் 1, 979 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

19. **ரூபாய் 125 கோடி மதிப்பீட்டில் 110 கி.வோ துணை மின் நிலையங்கள் தரம் உயர்த்துதல்.**

தரமான தடையற்ற மின் சேவையை வழங்கும் நோக்குடன் பன்னிரெண்டு 33 கி.வோ துணை மின் நிலையங்கள் 110 கி.வோ துணை மின் நிலையங்களாக ரூபாய் 125 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்த துரித நடவடிக்கை எடுக்கப்படும்.



20. **ரூபாய் 679 கோடி மதிப்பீட்டில் புதிய மின்மாற்றிகள் (Transformers) மற்றும் திறன் மேம்படுத்துதல்.**

மின்மாற்றிகளின் கூடுதல் மின்சுமையைத் தவிர்ப்பதற்காகவும் மற்றும் கூடுதல் மின் தேவையை பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், கூடுதல் மின்மாற்றிகள் மற்றும் மின் மாற்றிகளின் திறன் மேம்படுத்துதல் ஆகியவை சுமார் ரூபாய் 679 கோடி செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும்.

21. ரூபாய் 5, 050 கோடி மதிப்பீட்டில் 900 மின்னூட்டிகளில் (Feeders) உயர் மின்னழுத்த பகிர்மான அமைப்பினை நிறுவுதல்.

உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த விகிதாச் சாரங்களை குறைத்து, மின்னழுத்தத்தினை மேம்படுத்தி, நம்பகத்தன்மையை ஏற்படுத்திடவும், ஒட்டு மொத்த தொழிற்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை குறைப்பதற்காகவும் சுமார் ரூபாய் 5, 050 கோடி திட்ட மதிப்பீட்டில், 900 மின்னூட்டிகளில் உயரழுத்த மின் பகிர்மான அமைப்பு (HVDS) நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக ஆண்டிற்கு 300 மின்னூட்டிகள் வீதம், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மாநிலம் முழுவதும் படிப்படியாக மாற்றப்படும்.



22. சென்னை மாநகரம் மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட சென்னை மாநகர பகுதிகளில் மேல்நிலை மின்பாதைகளை புதைவடங்களாக (Underground Cable) மாற்றுதல்.

சென்னை மாநகரம் மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மின் பாதைகளை, புதைவடங்களாக மாற்றி செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும்.

23. மாவட்டங்கள் தோறும் மின் பகிர்மான வட்டம் அமையும் வகையில் 3 புதிய மண்டலங்கள் மற்றும் 3 மின் பகிர்மான வட்டங்களை உருவாக்கும் சீரமைப்பு நடவடிக்கையைத் தொடங்குதல்.

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில், மின் பகிர்மானம் 9 மண்டலங்களையும், 44 மின் பகிர்மான வட்டங்களையும் 176 கோட்டங்களையும், 644 உப கோட்டங்களையும் மற்றும் 2,858 பிரிவு அலுவலகங்களையும் உள்ளடக்கி உள்ளது. சில மாவட்டங்கள் பல மின் பகிர்மான வட்டங்களின் கீழ் வருவதால் நிர்வாக சிரமத்திற்கு வழிவகுக்கிறது. மேலும், மின் இணைப்புகள் பிரிவு அலுவலகங்களுக்கிடையே சமமாக பிரிக்கப்படவில்லை. அதாவது, குறைந்தபட்ச மின் இணைப்பு 678 முதல் அதிகபட்ச மின் இணைப்பு 51,689 வரை கையாளும் பிரிவுகள் உள்ளன.



நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், அன்றாட நடவடிக்கைகளில் வேலையை சமநிலைப்படுத்துவதற்காகவும், பகிர்மான நிர்வாக அமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும். இதன்படி, ஒவ்வொரு மாவட்டமும் குறைந்தது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களை முழுமையாக கொண்டிருத்தல், அரசு திட்டங்களை எந்த தடையும் இல்லாமல் மாவட்ட வாரியாக செயல்படுத்துவதற்கு சாத்தியமாக்கும்.

மேற்படி மறுசீரமைப்பு ஏற்பாட்டின் படி மண்டலங்களின் எண்ணிக்கை, தற்போதுள்ள 9 லிருந்து 12 ஆகவும், பகிர்மான வட்டங்கள் தற்போதுள்ள 44 லிருந்து 47 ஆகவும் தேவைக்கேற்ப கோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24. தகவல் தொழில்நுட்பம் மூலம் எளிதாக வணிகம் செய்யபுதியமுயற்சிகள்

விண்ணப்பிக்கும் செயல்முறையை எளிதாக்கும் பொருட்டு,மற்றும்,நுகர்வோரின் நலனுக்காகவும்,

I. விவசாய மின் இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் இணையதள வழி மூலம் செயல்முறைப்படுத்தப்படும்.

ii. மின் கட்டண மாற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் இணையதள வழி மூலம் பரிசீலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது, மின் நுகர்வோருக்கு விண்ணப்பிக்கும் செயல்முறையை எளிதாக்கும்.

iii. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை வங்கி பரிமாற்றத்தின் மூலம் இணையதள வழியில் திருப்பித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது விண்ணப்பதாரர்கள் கைமுறையாக விண்ணப்பித்து காசோலை மூலம் தொகையைப் பெற வேண்டும். இனிமேல், விண்ணப்பதாரர் எந்த அலுவலகத்திற்கும் செல்லாமல் தானாகவே தனது கணக்கில் தொகையைப் பெறுவார்.



நுகர்வோருக்கு வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்துவதற்காக அனைத்து வங்கிகளுக்கும் ஒற்றை கட்டண நுழைவாயிலை கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது 17 வங்கிகள் மட்டுமே வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளன. புதிய திட்டத்தின் கீழ் நுகர்வோர் எந்த வங்கியின் மூலமாகவும் வலைத்தள வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்தலாம்.

25. மின்மாற்றிகளின் எண்ணெய் பரிசோதனை ஆய்வகம் அமைத்தல்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பணிகளின் ஒரு பகுதியாக, மின்மாற்றிகளின் எண்ணெய் குறித்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, சுமார் ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக மின்மாற்றிகளின் எண்ணெய் பரிசோதனை ஆய்வகம் ஒன்றினை அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.



26. ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், கள்ளக்குறிச்சி மற்றும் பல்லடம் ஆகிய பகுதிகளில் புதிய மின் பகிர்மான அலுவலக கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அ. திருவாரூர் மின் பகிர்மான மத்திய அலுவலக கட்டிடம்

திருவாரூர் மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. கள்ளக்குறிச்சி மின் பகிர்மான மத்திய அலுவலக கட்டிடம்

கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இ. பல்லடம் மின் பகிர்மான மத்திய அலுவலக கட்டிடம்

பல்லடம் மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

27. இந்திய கணக்கு தரநிலை விதிகளின்படி (INDIAN Accounting Standards) கணக்கு அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் நிறுவனங்களான தநாமிவா நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் ஆண்டு கணக்கு அறிக்கைகள் நிறுவன சட்டத்தின் விதிகளின்படி, 2017-18 ஆம் நிதி ஆண்டு முதல் இந்திய கணக்கு தரநிலை (INDIAN Accounting Standards) விதிகளின்படி தயாரிக்கப்படவேண்டும். இதுவரை இவ்வாறு தயாரிக்கப்படாததால் நிதி நிறுவனங்களான ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) மற்றும் மின் விசை நிதி நிறுவனம் (PFC) மூலம் பெறப்படும் கடன்களுக்கு 0.5% வட்டி விகிதம் உயர்த்தப்பட்டு, ஆண்டொன்றிற்கு ரூ.300 கோடி நட்டம் ஏற்படுகிறது. இந்திய கணக்கு தரநிலை விதிகளின்படி, 2018-19 ஆம் ஆண்டு முதலான தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் மாற்றி அமைக்கப்பட்டு, 2020-21 ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



28. 1x800 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டம், நிலை 3ல் தூசித்திரை அமைத்தல்

காற்றில் பரவும் நிலக்கரி துகள்களினால் வடசென்னை அனல் மின் திட்டம், நிலை-3ன் அதி நவீன மின் உபகரணங்களுக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்க்கவும் மற்றும் மத்திய அமைச்சகம் சுற்றுசூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற விதிகளை பின்பற்றியும் வடசென்னை அனல் மின் நிலையம்-1 மற்றும் வடசென்னை அனல் மின் திட்டம், நிலை-3 ஆகியவற்றிக்கு இடையே 1 கி. மீ தூரத்திற்கு தூசித்திரை சுமார் ரூபாய் 33 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

29. அனைத்து அனல் மின் நிலையங்களுக்கும் நிலக்கரி பரிசோதனை செய்யும் தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் நிறுவப்படும்.

அனைத்து அனல் மின் நிலையங்களிலும் நிலக்கரியின் தரக்கண்காணிப்புக்காக தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் (Automatic Isoperibol Bomb Calorimeters) சுமார் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.



30. ரூபாய் 14.54 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுபாட்டு அமைப்பை (Distributed Control System), ஒவ்வொரு அலகிற்கும் ரூபாய் 14.54 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்து அதனுடைய கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

31. ரூபாய் 24.75 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அனல் மின் நிலையம்-II ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல்

மேட்டூர் அனல் மின் நிலையம் - II ல் உலர்ந்த சாம்பல் வெளியேற்றத்தை மேம்படுத்த உலர் சாம்பலை அழுத்தி எடுத்து செல்லும் அமைப்பு (Pressurized Dense Fly Ash Conveying system), சுமார் ரூ. 24.75 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.



32. மின் பாதைகளில் ஏற்படும் தடைகளை நீக்க ரூ.140 கோடி மதிப்பீட்டில் காற்றழுத்த திறப்பான்கள் (Sectionalizer) அமைத்தல்

துணை மின் நிலையங்களிலிருந்து செல்லும் உயரழுத்த மின் பாதைகளின் தூரம் அதிகம் உள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, நீண்ட தூரத்திற்குச் செல்லும் உயரழுத்த மின்பாதைகள் அனைத்திலும் இடையிடையே காற்றழுத்த திறப்பான்கள் அமைக்கப்படும். இதனால் மின்தடை நேரம் வெகுவாக குறைக்கப்படும். இதற்காக ரூ.140 கோடி மதிப்பீட்டில், 11 கிலோ வோல்ட் திறப்பான்கள் 25,000 மற்றும் 22 கிலோ வோல்ட் திறப்பான்கள் 7,500 கொள்முதல் செய்யப்படும்.

33. மின்தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்த புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல்

மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, 765 கி. வோ துணை மின் நிலையம் ஒன்று, 400 கி. வோ துணை மின் நிலையங்கள் ஆறு, 230 கி. வோ துணை மின் நிலையங்கள் பதினேழு மற்றும் இருபத்தியொன்று 110 கி. வோ துணை மின் நிலையங்கள் என மொத்தம் 45 துணை மின் நிலையங்கள் செயலாக்கத்திற்கு கொண்டு வர துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

**V செந்தில்பாலாஜி**

**மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**



அறிவிப்பு எண் 18–ன் இணைப்பு

துணை மின் நிலையங்கள்– புதியது

| வ. எண் | தொகுதி | வட்டத்தின் பெயர் | துணை மின் நிலையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 230 கிலோ வோல்ட் துணைமின்நிலையம் | | | |
| 1 | திருவள்ளூர் | காஞ்சிபுரம் | கனகவள்ளிபுரம் |
| 2 | ஒட்டன்சத்திரம் | திண்டுக்கல் | தும்பலம்பட்டி (பழனி) |
| 3 | நெய்வேலி | கடலூர் | கீழக்குப்பம் |
| 4 | கிருஷ்ணராயபுரம் | கரூர் | பழைய ஜெயங்கொண்டம் |
| 110 கிலோ வோல்ட் துணைமின்நிலையம் | | | |
| 1 | ஆவடி | சென்னை தெற்கு-I | பாரிவாக்கம் |
| 2 | கும்மிடிப்பூண்டி | சென்னை வடக்கு | மாதர்பாக்கம் |
| 3 | திருப்போரூர் | செங்கல்பட்டு | செம்பாக்கம் |
| 4 | பூந்தமல்லி | செங்கல்பட்டு | திருவூர் |
| 5 | திருவள்ளூர் | செங்கல்பட்டு | திருவாலங்காடு |
| 6 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | செக்காணந்தல் |
| 7 | திருக்கோவிலூர் | கள்ளக்குறிச்சி | சங்கனான்கொள்ளை (இளவனசூர் கோட்டை) |
| 8 | உளுந்தூர்பேட்டை | கள்ளக்குறிச்சி | பின்னல்வாடி |
| 9 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | பெருவங்கூர் |

| வ. எண் | தொகுதி | வட்டத்தின் பெயர் | துணை மின் நிலையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 10 | கடலூர் | கடலூர் | திருப்பாப்புலியூர் |
| 11 | தருமபுரி | தருமபுரி | வெண்ணாக்கால் |
| 12 | பாலக்கோடு | தர்மபுரி | புலிக்கரை |
| 13 | பென்னாகரம் | தர்மபுரி | பூச்சூர் |
| 14 | தளி | கிருஷ்ணகிரி | அக்கொண்டப்பள்ளி |
| 15 | தளி | கிருஷ்ணகிரி | தொட்டபேளூர் |
| 16 | தளி | கிருஷ்ணகிரி | ஜெக்கேரி |
| 17 | ஓசூர் | கிருஷ்ணகிரி | பேகப்பள்ளி |
| 18 | ஈரோடு மேற்கு | ஈரோடு | வில்லரசம்பட்டி |
| 19 | வேப்பனபள்ளி | கிருஷ்ணகிரி | சாம்பல்பல்லம் |
| 20 | நாமக்கல் | நாமக்கல் | எல்லூர் |
| 21 | தொண்டாமுத்தூர் | கோவை – தெற்கு | செல்வபுரம் (புட்டுவிக்கி) |
| 22 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் | தாண்டாகவுண்டன் புதூர் |
| 23 | பல்லடம் | திருப்பூர் | உகாயனூர் |
| 24 | காங்கேயம் | பல்லடம் | மடவிளாகம் |
| 25 | சூலூர் | பல்லடம் | அப்புநாயக்கன்பட்டி |
| 26 | குளித்தலை | கரூர் | சின்னப்பனையூர் |
| 27 | அரவக்குறிச்சி | கரூர் | பவித்திரம் |
| 28 | ஆலங்குடி | புதுக்கோட்டை | வம்பன் |



| வ. எண் | தொகுதி | வட்டத்தின் பெயர் | துணை மின் நிலையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 29 | திருமயம் | புதுக்கோட்டை | வேந்தன்பட்டி |
| 30 | திருமயம் | புதுக்கோட்டை | கடியாப்பட்டி |
| 31 | திருவாரூர் | திருவாரூர் | கொரடாச்சேரி |
| 32 | மன்னார்குடி | திருவாரூர் | சித்தாம்பூர் @ சவளக்காரன் |
| 33. | மன்னார்குடி | திருவாரூர் | கருவாக்குறிச்சி @ முக்குளம் |
| 34 | ஒட்டன்சத்திரம் | திண்டுக்கல் | தும்பலப்பட்டி |
| 35 | ஒட்டன்சத்திரம் | திண்டுக்கல் | கேதையூறும்பு |
| 36 | திண்டுக்கல் | திண்டுக்கல் | நாகல் நகர் |
| 37 | பழனி | திண்டுக்கல் | பண்ணைக்காடு |
| 38 | பழனி | திண்டுக்கல் | நெய்க்காரப்பட்டி |
| 39 | பழனி | திண்டுக்கல் | பழனி அடிவாரப்பகுதி |
| 40 | திருமங்கலம் | மதுரை | மைக்குடி |
| 41 | மதுரை கிழக்கு | மதுரை/மெட்ரோ | சூரியா நகர் |
| 42 | மதுரை கிழக்கு | மதுரை/மெட்ரோ | பணங்காடி |
| 43 | மானாமதுரை | சிவகங்கை | சாந்தனூர் |
| 44 | தென்காசி | திருநெல்வேலி | குற்றாலம் |

| வ. எண் | தொகுதி | வட்டத்தின் பெயர் | துணை மின் நிலையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 45 | தென்காசி | திருநெல்வேலி | மத்தளம்பாறை/ திரவையானகர் |
| 46 | பத்மநாபபுரம் | கன்னியாகுமரி | குலசேகரம் |
| 47 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | மைலாடி |
| 48 | கிள்ளியூர் | கன்னியாகுமரி | கிள்ளியூர் |
| 49 | விளவங்கோடு | கன்னியாகுமரி | இடைக்கோடு |
| 50 | பல்லடம் | திருப்பூர் | அலகுமலை |
| 51 | காங்கேயம் | பல்லடம் | ஊதியூர் |
| 52 | திருமங்கலம் | மதுரை | கப்பலூர் |
| 53 | மதுரை மேற்கு | மதுரை மேற்கு | பசுமலை |
| 33/11 கிலோ வோல்ட் துணைமின் நிலையம் | | | |
| 1 | தியாகராய நகர் | மத்திய சென்னை | சி.ஐ.டி நகர் |
| 2 | தியாகராய நகர் | மத்திய சென்னை | பெரம்பூர் பேரக்ஸ் ரோடு |
| 3 | பெரம்பூர் | சென்னை வடக்கு | எம்.கே.பி நகர் |
| 4 | பொன்னேரி | சென்னை வடக்கு | பெரும் சேரி (பிளைம் லைப்) |
| 5 | மாதவரம் | சென்னை வடக்கு | ரோடியன்ஸ் |
| 6 | அம்பத்தூர் | சென்னை மேற்கு | சதர்ன் அவென்யூ |



